

விருதுநகர் மாவட்டம் , அருப்புக்கோட்டை ஒன்றியம் , பாலையம்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் , நடைபெற்ற சிறப்பு முகாமினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு சான்றிதழ் வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், அருப்புக்கோட்டை முன்னாள் சேர்மன் சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



காரியாபட்டி பிசண்டி கிராமத்தில் சட்ட மன்ற மேம்பாட்டு நிதி ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடையை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார் . உடன் மாவட்ட கவுன்சிலர் தங்கத் தமிழ்வாணன், பொருளாளர் வேலுச்சாமி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் சேகர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தி.மு.கழகத் தலைவர் வழிகாட்டுதல்படி - புதுச்சேரியின்

# மண்-மொழி-மானம் காக்க “உடன்பிறப்பே வா” பரப்புரை!

## மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. அழைப்பு!

புதுச்சேரி, அக். 6 –

கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி அவர்கள் ஒன்றிய பாரதிய ஜனதா அரசின் பாசிச ஆதிக்கத்திலிருந்தும், அதற்கு துணை நிற்கும் புதுச்சேரி பா.ஜ.க கூட்டணி அரசிடமிருந்தும் மாநிலத்தை மீட்டு, புதுச்சேரியின் மண்–மொழி–மானம் காக்க, தி.மு.கழகத்தின் சார்பில் ”உடன்பிறப்பே வா பரப்புரையை முன்னெடுக்க ஆணையிட்டுள்ளார்.

புதுச்சேரி, மாநிலத்தில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்து, பாசிச பா.ஜ.க. கூட்டணி ஆட்சியின் அவலங்களை எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தபட்சம் 30 சதவீத வாக்குகளைக் கழக உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற இலக்கும் நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இப்பணியை ஒருங்கிணைத்துச் செய லாற்ற, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் நியமிக்கப்ப ட்டுள்ளார்.

அதன்படி, புதுச்சேரி மாநில தி.மு.கழகத்தின் சார்பில் ”உடன்பிறப்பே வா பரப்புரை முன்னெடுக்கும் முதல்கட்ட உறுப்பினர் சேர்க்கும் பணி 06.10.2025 திங்கள்கிழமை காலை 9.00 மணியளவில் தொடங்கப்படுகிறது.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் தலைமையேற்று, புதுச்சேரி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதையும் செலுத்துகிறார். தொடர்ந்து முத்தியால்பேட்டை தொகுதியில் ”உடன்பிறப்பே வா எனும் பரப்புரையை தொடங்கி, வீடு, வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கும் பணியை முன்னெடுக்கிறார். அதனைத் தொடர்ந்து, உப்பளம், முதலியார்பேட்டை, உருளையன் பேட்டை, நெல்லித்தோப்பு ஆகிய ஐந்து தொகுதிகளில் உறுப்பினர் சேர்க்கை பணியை தொடங்கி வைக்கிறார்கள்.

தொடக்க நிகழ்ச்சிக்கு அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் எம்.பி., சி.பி. திருநா வுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கழகத் தலைவர் அவர்களின் ஆணையின்படி, 2026–ல் மீண்டும் புதுச்சேரியில் 5–வது முறையாக திராவிட மாடல் ஆட்சி அமைவதற்காக நடைபெறும் இந்த உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியில், நமது மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இதனையே அழைப்பாக ஏற்று திரளாக பங்கேற்று தமிழ்நாடு போல் புதுச்சேரி மாநிலத்திலும் 30 சதவீத உறுப்பினர் சேர்க்கைப் பணியை முழுமையாக செய்து கழகத் தலைவர் அவர்களிடத்தில் சமர்ப்பிப்போம். வாரீர்! வாரீர்!!.

### இரக்கம், துயரம், துன்பம், இவற்றின் வெளிப்பாடே அழுகை!

# மனிதநேயமிக்க அமைச்சரின் அழுகையை அரசியலாக்காதீர்!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, அக். 6 –

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு. தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

கடந்த சில தினங்களுக்கு முன்பு கரூரில் நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவத்தினால் தமிழ் உறவுகள் 41 பேர் அகால மரணம் அடைந்திருக்கும் செய்தி உலகத்தையே உலுக்கி உள்ளது.

இதில் யார் மீது குற்றம் சொன்னாலும், யார் மீது அடுக்கடுக்காகப் புகார்களை அடுக்கினாலும் பிரிந்தவர்கள் திரும்ப வரப்போவது இல்லை, அவர்கள் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள துயரங்களும் தீரப்போவதில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க பிணத்தின் மீது அரசியல் செய்து பிழைப்பு நடத்தும் சிலர் இதை அரசியலாக்க முயன்று வருவது வேதனை. எந்த கட்சி எந்தக் கூட்டம் நடத்தினாலும் அதில் எந்தவிதமான பாதிப்பு ஏற்பட டா



லும் உடனடியாக அரசு களத்தில் இறங்கியே ஆக வேண்டும்.

இந்தப் பெரும் சோகம் நடந்ததைக் கேள்விப்பட்ட சில நிமிடங்களுக் குள்ளாகத் தனது இதயப்பூர்வமான இரக்கத்துடன் உடனடி நட வடிக்கைகளில் இறங்கி, அதிகாரிகளை அழைத்து, மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கோடு அரசு இயந்திரத்தை முடக்கி விட்ட தமிழ்நாடு முதல மைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியது.

அதைவிட நடந்த சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அருகாமை மாவட்ட அமைச்சர்களைத் தொடர்பு கொண்டு உடனடியாகக் கரூருக்கு விரைந்து சென்று, மனித உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று கட்டளையிட்ட முதலமைச்சரின் ஆணையை ஏற்று, அருகாமை மாவட்ட அமைச்சரான பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் களப்பணி ஆற்றிக்கொண்டிருந்த நிலையில் கரூருக்குத் தன் அதிவேகப் பயணத்தைத் தொடங்கி நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களை மருத்துவமனையில் சந்தித்து மனித நேயத்தோடு மக்களைக் காக்கத் தன் அத்தனை முயற்சிகளையும் உண்மையாக மேற்கொண்டு பம்பரமாகச் சுழன்று களத்தில் இறங்கினார்.

கண்ணெதிரே பிஞ்சுக் குழந்தைகள், தாய்மார்கள், குடும்பத்தைத் தாங்கி நிற்கும் தந்தைமார்கள் மற்றும் எதிர்காலத் தலைமுறைகள் எல்லாம் எதிர்பார்ப்பு ஏதும் இன்றிக் கூட்டத்திற்கு வந்து, விரும்பத்தகாத செயலினால் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டதை நேரில் கண்ட குழந்தை உள்ளம் கொண்ட அமைச்சர் அவர்கள், மாண்டுபோன உயிர்களையும் குறிப்பாக வாழ்க்கையில் கொஞ்சமும் அனுபவிக்காத பிஞ்சு குழந்தைகளின் மரணத்தையும் பள்ளி மாணவச்செல்வங்களின் மரணத்தையும் நினைத்து உயிர்களின் உணர்வியல் வெளிப்பாடாகிய கண்ணீர் விட்டு அழுத காட்சி உள்ளபடியே அவர் கண்களில் மட்டுமல்ல காண்பவர் அத்தனை பேர் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது என்பதுதான் உண்மை.

இத்துயர நிகழ்வில் நாடே கண்ணீர் சிந்தும் சூழலில் அமைச்சர் ஒருவர் தன் உணர்வை வெளிப்படுத்தியது எந்த விதத்தில் தவறாகும்?

அது என்ன... அமைச்சர் என்றால் அழக்கூடாதா? உணர்வு அற்ற இயந்திரமா? அமைச்சர் பெருமக்கள் மக்களில் ஒருவராக இருப்பது குற்றமா?

அமைச்சர் என்பதைத் தாண்டி, சட்டமன்ற உறுப்பினர் என்பதைத் தாண்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அன்பைப் பெற்றவர் என்பதையும் தாண்டி, களத்தில் உள்ள ஒரு சாதாரண மனிதன்தான் தானும் என்ற நிலையில் மக்கள் மடிந்து மரணிக்கும் காட்சிகளைப் பார்த்து அழாமல் இருக்க அமைச்சர் என்ன மனசாட்சி இல்லாதவரா ?

மனிதநேயமிக்கவரின் அழுகையை அரசியலாக்க வேண்டாம். முடிந்தால் மனித இறப்புக்கு உங்களால் முடிந்த ஒரு சொட்டுக் கண்ணீரை விடுங்கள்! இல்லையென்றால் மனித நேயமற்ற, மாண்பற்ற மனிதர்களாய் வாழ்ந்துவிட்டுச் செல்லுங்கள்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் உதவியாளர்

# புலவர் சி.சங்கரலிங்கம் துணைவியார் இரா.கலாவதி மறைவு!

## திராவிடர் கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 6 -

திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்களின் உதவியாளரும், விடுதலை நாளிதழில் மூன்று ஆண்டுகள் பணி புரிந்தவருமான ஆசிரியர், புலவர் சி.சங்கர லிங்கம் அவர்களின் துணைவியார் பட்டதாரி ஆசிரியை இரா.கலாவதி (வயது 69)அவர்கள் 2.10.2025 நேற்று காலை சென்னை குரோம்பேட்டை ரேலா மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெற்ற நிலையில் மறைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் சோழிங்கநல்லூர் மாவட்ட தலைவர் வேலூர் பாண்டு, பொதுக்குழு உறுப்பினர் இரா.கலைச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் தாம்பரம் சு.மோகன்ராஜ், மதுரபக்கம் தி.மு.கழக ஊராட்சி மன்ற தலைவர் மு.வேல்முருகன் BA. கோவிலாஞ்சேரி தி.மு. கழக நான்காவது வார்டு ஊராட்சி மன்ற உறுப்பினர் கோ.நாகரெத்தினம், கோவிலிஞ்சேரி ராகேஷ் சர்மா நகர்,பவானி நகர் குடியிருப்போர் நல சங்க உறுப்பினர்கள் த.குபேரன்,வினோத்குமார், காசிராமன்,மற்றும் மா.முருகையா ஆகியோர் உடனிருந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினர்.

4.10.2025 அன்று காலை சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு தோழர் கலாவதி அவர்களின் உடல் உடற்கொடையாக வழங்கப்பட்டது.

### ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்பவர்

# அதிகாரத்தில் அமர்வது மட்டுமே இலக்கு என்ற சுயநலவாதியாக இருக்கக் கூடாது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் நடிகர் விஜய்க்கு சாடல்!



தினகரன்

அக்டோபர் 5, 2025 ஞாயிற்றுக்கிழமை

இனியேனும் துளிர்க்குமா?

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி தவெக தலைவரும், நடிகருமான விஜய் பங்கேற்ற பிரசார கூட்டத்தில் 41 உயிர்கள், நெரிசலில் சிக்கி பலியான கொடூரம், தமிழக அரசியல் களத்தில் மறக்க முடியாத ஒரு கருப்பு சரித்திரம். இந்த கோரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்று அனைத்து நிலைகளிலும் உயிர்கள் தவித்தும், துடித்தும் சிதைந்து போனது பெரும் துயரமாக மாறி நிற்கிறது. இப்படியொரு துயரம் நிகழ்வதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? என்பது மக்கள் மன்றத்தில் பெரும் கேள்வியாக எழுந்தது. இது

சென்னை, அக். 6-

முதலில் தன்னை நம்பி வரும் மக்களை முழுமையாக நேசிப்பவராக இருக்க வேண்டும். நேசித்தால் மட்டுமே மக்களின் பாதுகாப்பு குறித்த உள்ளுணர்வு அவருக்குள் வரும் இதுபோன்ற கோரங்களை தவிர்க்க வழிவகுக்கும் என்றும் அரசியல் கட்சியினர் தலைவர் அதிகாரத்தில் அமர்வது மட்டுமே இலக்கு என்ற சுயநலவாதியாக இருந்தால் இப்படித்தான் நடக்கும் என ‘தினகரன்’ நாளேடு கூறியுள்ளது.

அது வருமாறு:-

கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி தவெக தலைவரும், நடிகருமான விஜய் பங்கேற்ற பிரசார கூட்டத்தில் 41 உயிர்கள், நெரிசலில் சிக்கி பலியான கொடூரம், தமிழக அரசியல் களத்தில் மறக்க முடியாத ஒரு கருப்பு சரித்திரம். இந்த கோரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்று அனைத்து நிலைகளிலும் உயிர்கள் தவித்தும், துடித்தும் சிதைந்து போனது பெரும் துயரமாக மாறி நிற்கிறது.

இப்படியொரு துயரம் நிகழ்வதற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? என்பது மக்கள் மன்றத்தில் பெரும் கேள்வியாக எழுந்தது. இது தொடர்பாக தவெக தலைவர் விஜய்க்கும், அவரது கட்சி நிர்வாகிகளுக்கும் நீதிமன்றம் தெரிவித்துள்ள கடும் கண்டனம், தற்போது இந்த கேள்விக்கான விடையை கொடுத்துள்ளது. கரூரில் நடந்தது மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவு. ஒரு கட்டுப்படுத்தாத கலவரம் போல் இந்த சம்பவம் நடந்துள்ளது.

பரப்புரை ஏற்பாட்டாளர்கள், தலைவர்கள் என்று அனைவரும் சம்பவம் நடந்ததும் தொண்டர்களையும், பின்தொடர்ந்தவர்களையும் விட்டுவிட்டு சென்று விட்டனர். இந்த துயரத்தில் அனைத்து கட்சிகளும் மீட்பு பணியில் இருந்தபோது, நிகழ்ச்சியை நடத்தியவர்கள் மட்டும் அங்கிருந்து வெளியேறி உள்ளனர். குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் இறந்திருக்கும் போது, ஒரு அரசியல் கட்சியின் இத்தகைய செயலை நீதிமன்றம் வன்மையாக கண்டிக்கிறது என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த நிகழ்வுக்கு தவெக கட்சியின் பொறுப்பற்ற நடத்தை மற்றும் அக்கட்சியின் தலைவர் விஜய் வருத்தம் தெரிவிக்க தவறியதையும் நீதிபதி கடுமையாக கண்டித்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர், முதல்வர் என்று அனைவரும் உடனடியாக வருத்தம் தெரிவித்தனர். ஆனால் சம்பந்தப்பட்ட கட்சியின் தலைவர் தனது வருத்தத்தை உடனடியாக பதிவு செய்யவில்லை. இது தலைவரின் மனநிலையை காட்டுகிறது. இது என்ன மாதிரியான கட்சி? தவெக தலைவர் விஜய்க்கு தலைமைத்துவ பண்பே இல்லை என்ற தனது ஆதங்கத்தையும் பதிவு செய்துள்ளார் நீதிபதி.

நீதிமன்றம் கண்களை மூடிக்கொள்ள முடியாது. நீதிமன்றம் மவுனசாட்சியாக இருக்க முடியாது. நீதிமன்றம் தனது பொறுப்புகளை தவிர்க்க முடியாது. இந்த நிகழ்வின் காட்சிகளையும், விளைவுகளையும் உலகம் முழுவதும் பார்த்துள்ளது. விஜய்யின் வாகன அணிவகுப்புக்கு அருகில் மோதிக்கொண்ட மோட்டார் சைக்கிள்கள், அவரது பேருந்துக்கு வழிவிடுவதற்கு தள்ளிவிடப்படும் ரசிகர்கள், ஆம்புலன்ஸ்கள் நுழைய முடியாமல் போராடிய போது ஏற்பட்ட குழப்பம் என்று காட்சிப்பதிவுகளையும் சாட்சியங்களாக வைத்துள்ளது உயர் நீதிமன்றம்.

இது ஒரு புறமிருக்க, இந்திய அரசியல் சரித்திரத்தில் எந்தவொரு கட்சி நடத்திய கூட்டத்திலும் இப்படி ஒரு பெரும் துயரம் இது வரை நிகழ்ந்ததில்லை என்பது சமூக மேம்பாட்டு அமைப்புகளின் வேதனை. இதற்கு ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்பவர், அதிகாரத்தில் அமர்வது மட்டுமே எனது ஒரே இலக்கு என்ற சுயநலத்துடன் பயணிப்பவராக இருக்க கூடாது.

முதலில் தன்னை நம்பி நாடி வரும் மக்களை முழுமையாக நேசிப்பவராக இருக்க வேண்டும். அப்படி நேசித்தால் மட்டுமே மக்களின் பாதுகாப்பு குறித்த உள்ளுணர்வு அவருக்குள் வரும். அந்த உணர்வானது இதுபோன்ற கோரங்களை தவிர்க்க வழிவகுக்கும். இந்த உணர்வானது புதிதாக அரசியலில் கால்பதித்துள்ள விஜய் போன்ற தலைவர்களுக்கு இனியேனும் துளிர்க்குமா என்பதே மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது.

இவ்வாறு தினகரன் நாளேடு தலையங்கத்தில் சாடியுள்ளது.

# கொள்கையை இதயத்தில் ஏற்று களமாடும் கலைஞரின் காலாட்படை !

“இது
கூட்டம் கூடி
கோஷம் போடுகின்ற
இயக்கம் அல்ல....!

வெயில் தாழ
வீதிக்கு வந்து
வேஷம் போடுகின்ற
இயக்கமும் அல்ல....!

”கொள்கையை
இதயத்தில் ஏற்றி
இருவண்ண
கொடியை
கைகளில் ஏந்தி
களமாடுகிற
கலைஞரின்
காலாட்படை....!!

”எங்களுக்கு
கோப்பை தேநீர்
போதும்
கோட்டையே
பிடிப்போமென
மெய்பித்த
இயக்கமிது....!!

”எளியவர் வாழ்வில்
ஏற்றமும்
மாதர்தம் வாழ்வில்
மாற்றமும்
தந்த
தன்னிகரில்லா
இயக்கமிது....!!

”பூவாளியில்
நீரூற்றி
தொட்டியில்
தழைத்த
செடிகள்
அல்ல நாங்கள்....!!

”காட்டாற்று வெள்ளம்
வந்து
கழுத்தை நெரித்தாலும்
கலங்காமல்
நிற்கும்
காட்டுமரங்கள்....!!

‘நெற்றி
வியர்வை
வற்றிப்போனாலும்
நேர்மறையும்
நெஞ்சுரமும்
அற்றுப்போகாத
அடலேறு
நாங்கள்....!!

”நேரத்திற்கு
நிறம்மாறும்
விஷப்பூச்சிகளும்..!

”ஆண்டான்
கதைபேசி
ஆண்டைகள்
பாதம்தொழும்
அடிமைகளும்....!
”காகித
வசனங்களுக்கு
தலையசைக்கும்
காற்றாடிகளும்
களத்தில்
எங்களுக்கு
பொருட்டல்ல....!!

”இருவிழி மூடாமல்
இருவண்ண
கொடியேந்தி
இயக்கத்திற்காய்
அல்லும் பகலும்
அயராதுழைக்கும்
அக்மார்க்
உடன்பிறப்புகளுக்கு
சமர்ப்பணம்..!!

...அன்புடன்...
நிறம்
தடம்
கொள்கை மாறாத
மூன்றாம் தலைமுறை
உடன்பிறப்பு...!!



வழக்கறிஞர்
நா.நவீன்குமார்



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டாரம், அம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முகாமை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார் . இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் டி.சாமுண்டி, ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், ஊராட்சிமன்ற தலைவர் எ.பி.முருகேசன், ஒன்றிய கவுன்சிலர் ஆர்.பி.முரளி மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.




விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் பறையன் தாங்கள் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் குறித்து துறை சார்ந்த அதிகாரியிடம் கேட்டறிந்துகர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து அடங்கிய பெட்டகத்தினை வழங்கினார். உடன் கண்மணி நெடுஞ்செழியன், ஜெய்சங்கர், நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், செல்வி இராமசரவணன், ஏழுமலை உள்ளனர்.